THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி


# தூது

நற்செய்தி துணுக்குகள்

## பிப்ரவரி 2024 (மடல் - 24) செய்தி-2

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; எபேசியர் 2:8

# பொருளடக்கம்




| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 8 |
| Children's Corner | 12 |
| வேத வினாக்கள் | 23 |
| கோதுமை மணி | 26 |
| துணுக்குகள் | 28 |
| ஆலய பக்கம் | 30 |

# ஆயர் மடல்

***“தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்” [*** **2கொரிந்தியர் 5:19]**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். ஆண்டவரின் பெரிதான கிருபையினால் புதிய மாதத்துக்குள் வந்திருக்கிறோம். கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும், நமது குடும்பத்தையும் பாதுகாத்து வழிநடத்தி வந்திருக்கிறார், ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். குறிப்பாக Junior Church retreat மற்றும் Junior Church Picnic சிறப்பாக நடைபெற ஆண்டவர் கிருபை செய்தார். இந்தப் புதிய மாதம் நம் அனைவருக்கும் ஆசீர்வாதத்தின் மாதமாக அமைய ஆண்டவர் அருள் செய்வாராக. லெந்து காலங்களுக்குள் பிரவேசிக்க இருக்கிறோம். லெந்து காலம் நமது உறவுகளைச் சீர்படுத்திக் கொள்ளுகின்ற காலங்கள்.

இயேசு கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்ப்பு வழியாக மனுக்குலத்திற்கு ஏற்பட்ட பலன்களில், ***“ஒப்புரவாக்குதல்”*** (Reconciliation) என்பது மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, பவுல் தனது கடிதங்களில் ஒப்புரவாக்குதல் என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார். (2கொரி 5:18-20, ரோமர் 5:10,11, எபேசியர் 2:14-16) ஒப்புரவாகுதல் என்பது இரண்டு பேர் அல்லது இரண்டு குழுக்களிடையே பகைமையின் காரணமாக உறவு முறிவு ஏற்ப்பட்டு பிரிந்திருந்து, திரும்பவும் ஒன்றாக இணைந்து நல்லுறவுடன் வாழும் நிலையைக் குறிக்கிறது. மனுக்குலம் பாவத்தின் விளைவாக, கடவுளுக்கு பகைவராக மாறியபோது, கடவுள் முழு உலகையும் கிறிஸ்துவைக் கொண்டு, சிலுவை வழியாக தம்மோடு ஒப்புரவாக்கியிருக்கிறார்.

அனைத்து சமயங்களிலும் மனிதன் தனது முயற்சியினால் கடவுளோடு ஒப்புரவாகவேண்டும் என்கிறது. ஆனால் திருமறைமட்டும் முற்றிலும் மாறுபட்ட கருத்தைச் சொல்கிறது. கடவுளோடு ஒப்புரவு என்பது மனித முயற்சியினால் இயலாது. ஏனெனில் மனிதன் பாவியாகவே இருக்கிறான். பாவியாக இருக்கின்ற மனிதன் எடுக்கின்ற எல்லா முயற்சிகளும், செயல்பாடுகளும் பாவம் உள்ளதாகவே இருக்கும், இதனால் மனிதன் தனது முயற்சியினால் ஆண்டவரோடு ஒப்புரவாக முடியாது.

ஆனால் கடவுள், மனிதன் ஒப்புரவாகுதலைப் பற்றி நினையாத வேளையில் அதாவது அவன் பாவநிலையில் இருக்கும் பொழுதே (ரோமர் 5:10) கடவுள் முந்தி செயல்பட்டுத் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் வழியாக மனுக்குலத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொண்டார். ஒப்புரவாகுதல் என்பது முழுக்க முழுக்க கடவுளின் முயற்சியால் நடைபெருகிறது. ஒப்புரவாகுதல் என்பது மனுக்குலத்திற்குக் கடவுள் கொடுத்த இலவசப் பரிசு (Reconciliation is a gift of God) கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்கிறவர்கள் கடவுளோடு நல் உறவுடன் வாழும்

சிலாக்கியம் கிடைக்கிறது (ரோமர் 5:11) ஒப்புரவாக்கும் பணியில் கடவுளின் செயல்படே முக்கியமானது.

***ஒப்புரவாகுதலால் கிடைக்கும் பலன்:***

***a) தேவனோடு சமாதானம்:*** (ரோமர் 5:1)

மனுக்குலத்திற்கும் கடவுளுக்கும் இடையே ஒரு சமாதான உறவு ஏற்படுகிறது இதனால் கடவுளின் கோபத்தின் அச்சுறுத்தலிலிருந்து மனுக்குலம் தப்பித்துக்கொள்கிறது.

***b) பரிசுத்தமாக்கப்படுகிறோம்:*** (கொலோ1:20,21)

முன்பு ஆண்டவருக்குத் தூரமாகவும், சத்துருவாகவும், பாவிகளாகவும் இருந்த நம்மை ஒப்புரவாகுதல் வழியாக பரிசுத்தவான்களாகவும், குற்றமற்றவராகவும் மாற்றப்படுகிறோம். (எபே 2:19)

***c) மற்றவர்களோடும் ஐக்கியம்:*** (எபே 2:12-19)

கடவுளின் ஒப்புரவாகும் செயலின் வழியாக கடவுளோடுமட்டுமல்லாது மற்றவர்களோடும் நமக்கு ஐக்கியம் ஏற்படுகிறது. யூதர்களையும் புற இன மக்களையும் ஒன்று சேர்க்கிறது. இரண்டு பேருக்கும் இடையே இருந்த பகையாகிய நடுச்சுவரைத் தகர்த்து ஒன்றிணைக்கிறது. நாம் அனைவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாக்கப் பட்டிருக்கிறோம். (கலா 3:28)

ஒப்புரவாகுதல் ஏற்கனவே இயேசு கிறிஸ்து வழியாக நடந்து முடிந்த நிகழ்ச்சி. என்றாலும், ஒப்புரவாக்குதலின் பணியை ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கிறார். அது இன்னும் தொடர்ந்து செய்ய வேண்டிய ஒன்று. ஏனென்றால் கடவுள் முழு உலகையும் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். (2கொரி 5:18,20) எனவே மனுக்குலம் அனைத்தும் ஆண்டவரோடு நல்லுறவு கொள்ளும்வரைக்கும் ஒப்புரவாகுதலின் பணி தொடர்கிறது. அந்தத் திருப்பணியை நாம் அனைவரும் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம்.

கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக.

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
*Rev. Dr. A. Samuel*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. இந்த ஆண்டின் முதல் மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக, ஆச்சரியமாக பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும், நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

***“கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானது அல்ல இது தேவனுடைய ஈவு.”*** *எபேசியர் 2:8*

ஒரு சிறுவன் தன் தகப்பனிடம் அப்பா ***“என் கிருபை உனக்குப் போதும்”*** என்கின்ற வேத மொழியின் பொருள் என்ன? என்று கேட்டான். அதற்கு தகப்பனார், சிறிய மீன் ஒன்று தண்ணீரை குடிப்பதினால் கடல் நீர் வற்றிப்போய் விடுமோ என்று கவலைப்படும்போது, கலங்காதே மீனே, என் தண்ணீர் உனக்குப் போதுமானது என்று கடல் சொல்லுவது போலவும், பெரிய களஞ்சியத்தில் வாழும் சுண்டலியானது தான் தானியங்களை தின்பதினால், களஞ்சியம் குறைந்து, பட்டினி கிடக்க நேரிடுமோ என்று பயப்படும்போது, பயப்படாதே சுண்டலியே, என் களஞ்சியம் உனக்கு போதுமானது என்று சொல்வது போலவு இருக்கிறது என்றார். நாமும் பலவீனமான நேரங்களில், பலவித பிரச்சனைகளையும், துன்பங்களையும், துயரங்களையும் கண்டு கலங்குகிற பொழுது, ***மனிதனே என் கிருபை உனக்கு போதும் என்கிறார் ஆண்டவர்.***

***1. கிருபை*** (Grace)

கிருபை என்ற பதத்திற்கு ***“தயவு”*** என்று பொருள். ***தகுதியே இல்லாதவர்களுக்கு ஆண்டவர் காட்டும் இரக்கத்தையே கிருபை என்கிறோம்.*** இது கடவுள் கொடுக்கின்ற இலவச பரிசு. இயேசு கிறிஸ்து கிருபையின்வழியாக நம்மை இரட்சித்திருக்கிறார். நாம் பாவிகளாகவே இருபதினால் கடவுளிடம்சேருவாற்கு நமக்கு எந்தத் தகுதியும் இல்லை. ஆனால் இயேசு கிறிஸ்து சிலுவை வழியாக நமது பாவங்களை மன்னித்து, கடவுளோடு சேரும் சிலாக்கியத்தைக் கொடுத்திருக்கிறார்.

ஆக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த நம்மை உயிர்ப்பித்து, இரக்கத்தில் ஐசுவரியம் உள்ள ஆண்டவர் நம்மில் அன்பு கூர்ந்து நம்மை கிருபையினாலே இரட்சித்திருக்கிறார். இந்த கிருபை தகுதியில்லாத நமக்கு கிடைக்கப்பெற்ற இலவச ஈவு. இந்த இலவச பரிசை விசுவாசத்தின் வழியாக பெற்றுக்கொள்கிறோம்.

*2. ஆண்டவர் தமது கிருபையை யாருக்கு கொடுக்கிறார்?*

a. ***கர்த்தரை நம்புகிறவர்களுக்கு***: கடவுளின் கிருபையை, விசுவாசம் என்கிற பாத்திரத்தின் வழியாக பெற்றுக்கொள்கிறோம். காத்தரையே முழுவதுமாகச் சார்ந்து வாழ்வது. (சங்கீதம் 32:10, தானியேல் 3:17).

***b. கர்த்தருக்கு பயப்படுகிறவர்களுக்கு:*** பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாக இருக்கிறதோ அவருக்கு பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபை அவ்வளவு பெரியதாயிருக்கிறது. (சங்கீதம் 103:11) இறை அச்சத்தோடு வாழும் மக்களுக்கு ஆண்டவர் இரக்கம் பாராட்டுகிறார். இறையச்சம் என்பது கர்த்தருக்குக் கீழ்படிவதில் வெளிப்படுகிறது.

***c. தாழ்மையுள்ளவர்களுக்கு:*** பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். (1பேதுரு 5:6) தாழ்மை என்பது கடவுளுக்கு முன்பாக நாம் ஒன்றுமில்லாதவர்கள் என்று உணர்வது. நாம்மை முழுவதுமாக அர்பணிப்பது. கடவுளின் விருப்பத்துக்கு முழுவதுமாக கையளிப்பது. பவுலைப்போன்று இனி நான் அல்ல கிறிஸ்து என்னில் வாழ்கிறார் என்று கடவுளின் விருப்பத்துக்கு ஒப்புக்கொடுபப்பதே தாழ்மை. இலவசப் பரிசாகிய கிருபையை விசுவாசத்தின் வழியாக பெற்றுக்கொள்வோம் ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*மீட்பரின் பணியில்*
Mrs. S. *ஜெபா சாமுவேல்*
**ஆயரம்மா**

## உறவுகளை சீர்ப்படுத்தும் காலம்

**"தேவனே, என்னை ஆராய்ந்து… இருதயத்தைச் …சோதித்து… சிந்தனைகளை அறிந்து… நித்திய வழியிலே என்னை நடத்தும்" (சங்கீதம் 139:23-24).**

சாம்பல் புதன் என்றழைக்கப்படும் நாள் தொடங்கி, ஞாயிறு தினங்கள் தவிர, கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நாளுக்கு முதல் நாள் அடங்கலான காலப் பகுதியே 'லெந்து காலம்' எனப்படுகிறது. முதல் மூன்று நூற்றாண்டு கிறிஸ்தவர்களினால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த பண்டிகை நாளுக்கு முன்பு மூன்று நாட்கள் மட்டும் லெந்து நாட்களாக அனுசரிக்கப்பட்டு வந்தது. கி.மு. 140-202ஆம் ஆண்டளவில் வாழ்ந்த இரேனியஸ் என்ற இறையியல் பேராசிரியர், "இயேசு கிறிஸ்துவை தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் எடுக்கும் முன்பாகத் தங்களை ஆராய்ந்து, தமது பாவங்களை அறிக்கையிட்டு, தங்களை கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப்பதற்காக இந்நாட்களை ஏற்படுத்திக் கொண்டனர். ஆனால், அதின் பிற்பாடு இந்த லெந்து நாட்கள் "நைசீன்" என்று அழைக்கப்பட்ட மன்ற உறுப்பினரால் கி.மு.325ஆம் ஆண்டளவில் நாற்பது நாட்களாக அதிகரிக்கப்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளார். பின்னர், இதுவே திருச்சபைகளில் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**<u>ஆராய்ந்து அறிதல்</u>**

கிறிஸ்தவ வாழ்வு என்பது, ஒருமுறை பாவத்தை அறிக்கைசெய்து, ஞானஸ்நானம் எடுத்துக்கொள்வதோடு நிறைவுபெறுவதில்லை. இதுவரை பாவத்திற்கு அடிமையாயிருந்தவன், இப்போது கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய ஆரம்பத்துக்குள் வருகிறான்; அதாவது, அவன் ஒரு புதிய சிருஷ்டியாகிறான். அதற்காக, அவன் வேறு உலகில் வாழமுடியாது; பாவம் நிறைந்த இந்த உலகில்தான் தொடர்ந்தும் வாழவேண்டும். அதனால், பாவசோதனைகளை அவன் சந்தித்துத்தான் ஆகவேண்டும். விட்டுவந்த பாவ வாழ்வில் திரும்பவும் விழுந்துவிடாதபடி கிறிஸ்துவுக்குள் உறுதியாய் வளரவேண்டுமாயின், அவன் நித்தமும் தன்னை ஆராய்ந்து, கிறிஸ்துவுக்குள் தனது நிலையைச் சோதித்தறிந்து, தினமும் தன்னை தேவசமுகத்தில் சுத்திகரித்துக்கொள்ள வேண்டியது அவசியம். அப்போது, அவனது உள்ளான மனுஷன் கிறிஸ்துவுக்குள் தினமும் புதுப்பிக்கப்பட்டு, அவன் தன் ஆவிக்குரிய வாழ்விலே வளர்ச்சியடைகிறான்.

இந்த வளர்ச்சிக்கு இந்த லெந்து காலம் நமக்கு மிகவும் உதவுகிறது. நமக்குள்ளான ஒரு கட்டுப்பாட்டில் வளரவும், உள்ளான மனுஷன் பெலப்படவும், இந்த லெந்து காலத்தில் நாம் செய்யும் ஜெபம், தியானம், உபவாசம் யாவும் நமக்கு பெரிதும் உதவுகின்றன. சிலுவையைத் தியானிக்கத் தியானிக்க நமது உள்ளம் உண்மையாகவே உடைகிறது என்பதை நாம் அனுபவித்திருக்கிறோம். ஆகவே, இந்நாட்களில் நமது முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மெய்யான கீழ்ப்படிவோடும் தேவனைத் தேட நம்மை ஒப்புவிப்போமாக.

**<u>சுய பரிசோதனை செய்தல்</u>**

லெந்து காலம் சுயபரிசோதனை செய்யும் காலம். நம்முடைய இயலாமை எது? நம்மில் குடிகொண்டிருக்கும் இரு எதிர்நிலை, நம்பிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் எவை? கிறிஸ்தவ வாழ்வு மற்றும் கிறிஸ்துவுக்கு எதிரான வாழ்வு இரண்டும் நம்மில், நமது குடும்பத்தில், நமது பணிகளில், நமது திருச்சபையில் இத்தகைய முரண்பாடு இன்றி வெளிப்படுவதை நம்மால் உணரமுடிகிறதா? இதை உணரும் நேர்மை, பக்குவம் நமக்கு உள்ளதா? நம்மில் இருக்கும் கருத்து வேறுபாடுகளை அகற்ற நாம் கடவுளின் துணையைத் தேடியதுண்டா? அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதுண்டா ? இத்தகைய கேள்விகள் நம்மை சுய பரிசோதனை செய்து இறைவனோடு மட்டுமல்ல நம் சகோதர சகோதரிகளோடும் உள்ள நம் உறவை சரிபடுத்திக்கொள்ள உதவி செய்யும்.

கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதன் இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலா.5:23). ஏனெனில், விழுந்துபோன இந்த உலகில் நித்தமும் பாவ சோதனைகளும் துன்ப சோதனைகளும் நம்மை நெருக்கிக்கொண்டே இருக்கும். ஆகவே ஒவ்வொரு கணமும் நான் கிறிஸ்துவினுடையவன் மாத்திரமல்ல நான் கிறிஸ்துவையுடையவன் என்பதையும் நாம் நினைத்திருக்கவேண்டும்.

பிரியமானவர்களே, நாம் சாதாரணமானவர்கள்தான்; ஆனால் தேவனுடைய கைகளில் நாம் அசாதாரணமானவர்கள். கிறிஸ்துவுக்குள் நாம் புதிய வாழ்வு, புதிய நோக்கு, புதிய விருப்பம், புதிய சிந்தனை என்று எல்லா விதங்களிலும் நாம் புதியவர்கள். இப்படியிருக்க மாம்சத்தின் கிரியைகளுக்கு (கலா.5;:19-21) விழுந்துபோன ஆதாமின் சுபாவத்திற்கு நாம் இன்னமும் இடமளிக்கலாமா? சிந்திப்போம். மாம்சத்திற்கு இடம் கொடாத படி, சுய பெருமை விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடாத படி இறைவனோடும், மற்றவர்களோடும் நமக்கு உள்ள உறவை சரி செய்து கொள்ள அர்ப்பணிப்போம். ஆவியானவர் தாமே அந்த பலத்தை கிருபையை நமக்கு இந்த தவக்காலத்தில் தந்து நம்மை வழிநடத்துவராக ..ஆமென் .


கிறிஸ்துவில் அன்புடன்

**ஜெய சந்திர ராஜா**

# ஒப்புரவான இரட்டை சகோதரர்கள்

நம் முற்பிதாக்களில் ஒருவரான ஈசாக்கின் மனைவி ரெபெக்காளுக்கு ஜெபத்தின் மூலம் கிடைத்த தவ புதல்வர்கள் ஏசாவும் யாக்கோபும். பிறக்கும்போதே தன் அண்ணன் ஏசாவின் குதிங்காலை பிடித்த வண்ணம் பிறந்தார் யாக்கோபு (ஆதி.25:26). இரட்டை சகோதரர்களாக இருந்தாலும் அவர்களிடையே இளமையில் சிநேகமும் அன்பும் இருந்ததாக எழுதப்படவில்லை. பெற்றோரின் பட்சபாதமான வளர்ப்பும் கூட ஒருவேளை இதற்கு காரணமாய் இருந்திருக்கலாம்.

### வீட்டை விட்டு ஓடும் யாக்கோபு



சேஷ்டபுத்திரபாகத்தை ஏசாவிடம் தந்திரமாக பெற்றுக்கொண்ட யாக்கோபு, தன் தகப்பன் ஏசாவுக்கு கொடுக்கவிருந்த அனைத்து ஆசீர்வாதங்களையும் ஏமாற்றி பெற்றுவிட்டான். அவன் தாய் ரெபெக்காளும் இதற்கு உடந்தையாயிருந்தது மிகவும் வருந்தத்தக்க காரியமாகும். ஏமாற்றப்பட்ட ஏசா, தன் சகோதரன் யாக்கோபை தன் தகப்பன் மரித்த பின் கொன்றுவிட வேண்டுமென்று திட்டமிடுகிறான். எனவே யாக்கோபு, தன் உயிரைக் காப்பாற்ற, தாயின் ஆலோசனைப்படி, ஆரானிலிருக்கும் தன் மாமன் லாபான் வீட்டிற்கு ஓடிப்போகிறான். அங்கு பல கஷ்டங்கள் மத்தியில் லேயாளையும், பின் ராகேலையும் திருமணம் செய்தான். அவர்கள் வேலைக்காரிகளையும் தன் மனைவிகளாக சேர்த்துக் கொண்டான். யாக்கோபுக்கு இவர்கள் மூலம் 12 மகன்களும், ஒரு மகளும் பிறந்தனர். திரளான ஆடுகளும் ஒட்டகங்களும் கழுதைகளும் வேலைக்காரர்களும் உடையவனாய் விருத்தி அடைந்தான்.

### வீடு நோக்கி திரும்பும் யாக்கோபு

அப்போது, கர்த்தரின் சத்தத்திற்கு செவிகொடுத்து, தன் மனைவிகள், பிள்ளைகள், சம்பாதித்த ஆடுகள், கழுதைகள், ஒட்டகங்கள் மற்றும் வேலைக்காரர் அனைவரோடும் தன் சொந்த ஊருக்குத் திரும்புகிறார் யாக்கோபு. தன்னை கொல்ல வகைதேடின தன் சகோதரன் ஏசாவின் மனம் இப்போது எப்படி இருக்குமோ என்ற பயம் அவருக்கு கட்டாயம் இருந்திருக்கும். ஆனாலும் கர்த்தரின் வார்த்தைக்கு செவிக்கொடுத்து புறப்படுகிறார். தன் சகோதரனை காண வருவதாக செய்தி அனுப்புகிறார். ஏசாவோ தான் எதிர்கொண்டு வருவதாக பதில் அளிக்கிறார். இதைக் கேட்டு பயந்த யாக்கோபு, தன்னை ஒரு வேளை அழித்து விடுவாரோ என்று அஞ்சுகிறான். அவரை சமாதானப்படுத்த முதலாவதாக நூற்றுக்கணக்கான ஆடுகள், மாடுகள், ஒட்டகங்கள் மற்றும் கழுதைகளை அனுப்பி வைக்கிறார். அதன்பின் தன் வேலைக்காரர் குடும்பங்களையும், லேயாள் குடும்பத்தையும், கடைசியாக தனக்கு உயிரான ராகேல் குடும்பத்தையும் அனுப்புகிறார்.

### தேவனோடு ஒரு சந்திப்பு

அப்படி போகும் வழியில், இரவில் தூதனானவனோடு போராடி யாக்கோபு மேற்கொண்டார். இனி நீ 'இஸ்ரவேல்' என்று அழைக்கப்படுவாய் என்று தேவன் வாக்குக் கொடுத்தார். தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, சகோதரனோடு ஒப்புரவாக செல்லும் யாக்கோபை தேவன் ஆசீர்வதிக்கிறார் (ஆதி.32:28,29). தேவனோடு போராடியதில் அவருடைய தொடை நரம்பில் சுளுக்கு ஏற்பட்டது.

### ஏசா - யாக்கோபின் சந்திப்பு



பின்னர் யாக்கோபு, தன்னுடைய உடைமைகள், ஆட்கள் அனைத்திற்கும் முன்பாக சென்று தன் சகோதரனை எதிர் கொண்டு போனார். அவர் மனதில் அநேக எண்ணங்கள் அலைபாய்ந்து கொண்டிருந்திருக்கும். ஏசாவைக் கண்ட யாக்கோபு ஏழுமுறை குனிந்து வணங்கி, தன் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறார். ஏசா அவரை கட்டித் தழுவ, இருவரும் அழுகின்றனர். ஒரு உணர்ச்சி வசமான சந்திப்பு. அவர்கள் கண்ணீரில், அவர்களுடைய பகை, விரோதம், பழி வாங்கும் எண்ணம் அனைத்தும் கரைந்து விட்டது. எத்தனை ஆச்சரியம்! அதன் பின் தன் வெகுமதிகளை ஏசாவுக்கு வழங்குகிறார் யாக்கோபு. முதலில் ஏசா மறுத்தாலும் பின்னர் அனைத்து வெகுமதிகளையும் , தான் அவரை மன்னித்ததற்கு அடையாளமாக, தன் தமையனிடமிருந்து பெற்றுக்கொள்கிறார். முதலில் சத்துருக்களாக இருந்தவர்கள், இப்பொழுது சகோதர பாசத்தால் இணைந்தனர். தேவனின் முகத்தை, தன்னை கொன்று போடுவேன் என்று முன்பு கூறியிருந்த ஏசாவின் முகத்தில் கண்டதாக யாக்கோபு கூறுகிறார் (ஆதி.33:10). இரு சகோதரர்களும் வருடக் கணக்காக தங்கள் மனதை அழுத்தி, சந்தோஷத்தை எடுத்துப் போட்டிருந்த பகைமை என்னும் பாரம் அகன்று, அன்பான பாசத்தாலும் நேசத்தாலும் சொல்லாண்ணா மகிழ்ச்சியும் சமாதானமும் அடைந்தனர்.

ஒப்புரவாகுதலுக்கு சில சமயத்தில் ஆபத்தான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். அதற்கு தியாகம் தேவை. தன்னலமற்ற மனம் வேண்டும். தேவனுக்கு முன்பாக உண்மையாகவும், அவரிடம் நம்பிக்கையும் கொண்டு இருந்தால், அவரே நம்மை நம் பகைவரோடு ஒப்புரவாக நடத்தி செல்வார். இறுதியில் நம் தேவனின் முகத்தை நம் எதிரியின் முகத்தில் காணும்படி தேவன் உதவி செய்வார். நாமும், நம்மை ஒரு காலத்தில் பகைத்தவர்களும் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவோம். ஒருவேளை நமக்கு யாரிடமாவது கசப்புணர்வு இருக்குமாயின், தேவ சமூகத்தில் யாக்கோபை போல போராடி பெலனை பெற்றுக்கொண்டு, அவர்களை எதிர்கொண்டு நம் சமாதானத்தை தெரியப்படுத்துவோம். அப்போது உலகம் தரக்கூடாத தெய்வ சமாதானம் நம்மை ஆட்கொள்ளும்.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### ஆசீர்வாதத்தின் சுதந்தரவாளி - ரூத்

ரூத் சரித்திர புஸ்தகம். ரூத் ஒரு மோவாபிய பெண். பஞ்ச காலத்தில் அடைக்கலம் தேடி மோவாபுக்குச் சென்ற எலிமலேக்கின் குடும்பத்தின் இரண்டாவது மகனை விவாகம் செய்தவள் ரூத் (அர்த்தம் - நட்பு). தனது கணவன், அவன் சகோதரன், அவன் தகப்பன் இவர்களின் மரணத்திற்கு பிறகு ரூத் தன் மாமியாராகிய நகோமியுடன் தன் கணவனின் பூர்வ தேசம் திரும்பினாள். ரூத்தின் வாழ்வு வெறுமையிலிருந்து நிறைவுள்ளதாய் மாற்றப்பட்டது. இதற்கு காரணம் அவளுடைய தீர்மானம். ரூத் 1:16,17-ல், அவள் மாம்ச இச்சைக்கு இடம் கொடாமல் சர்வலோக தேவனை தன் வாழ்வின் பங்காக தெரிந்தெடுத்தாள். மாமியாரோடே கூட இருக்க தீர்மானித்தாள்.

**தேவனை சார்ந்த வாழ்வு:**

சிந்தும் கதிர்கள் எளியவனுக்கும், பரதேசிக்கும் விடப்பட வேண்டும் என்பது தேவ கட்டளை. அந்த வார்த்தையை புரிந்து கொண்ட ரூத் தன் வாழ்வை அமைத்துக் கொண்டாள். போவாஸ் சொல்லும்போது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்தவள் என்று சொல்கிறார். தேவனுடைய செட்டைகளின் கீழ் பாதுகாப்பு உண்டு; சந்தோஷம் உண்டு; ஆரோக்கியம் உண்டு; ஆசீர்வாதம், அதிகாரம், அங்கீகாரம் உண்டு.

**கீழ்ப்படிதலுள்ள வாழ்வு:**

ரூத் 3:3,6-ல் தன் மாமியாருக்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிறோம். குளித்து தன்னை சுத்தம் பண்ணி, வஸ்திரங்களை உடுத்தினாள். அன்று அவளுக்கு போவாஸ் கண்களில் தயவு கிடைத்தது.

**கரிசனையுள்ள வாழ்வு:**

வாழ்வில் எல்லாவித சந்தோஷங்களையும், நம்பிக்கைகளையும் இழந்து கசந்த வாழ்வுடன் நின்ற தனது மாமியை கடைசிவரை ஆதரிக்க முன்வந்தாள். தன்னலமற்ற வாழ்க்கை வாழ்ந்தாள். எடுத்த தீர்மானத்தில் உறுதியாயிருந்து கடைசிவரை மாமியாரை ஆதரித்தாள்.

**உழைக்கும் வாழ்வு:**

கதிர் பொறுக்குவது இலகுவான வேலை அல்ல. கடினமான வேலை. ரூத் பெத்லெகேமுக்கு வந்தபோது கோதுமை அறுவடை நாட்கள். வீட்டில் வருமானம் ஈட்டும் நபர் யாருமில்லை. கதிர் பொறுக்க உற்சாகத்துடன் முன் வந்தாள். அவள் கதிர் பொறுக்க சென்ற நிலம் போவாசுடையதாயிருந்தது. அது அவளுக்கே சொந்தமாயிற்று.

**ஆசீர்வாதத்தை பொறுமையுடன் சுதந்தரித்தாள்:**

போவாசை அடையும் வழியை நகோமி சொன்ன நாளிலிருந்து ரூத் அவள் சொன்னபடியெல்லாம் செய்தாள்.

ரூத்தின் தேவன் நம் தேவன். அவருடைய செட்டையின் கீழ் நாம் வரும்போது, நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். எவரையும் தள்ளாத தேவன். நம்மை வாழ செய்பவர். நம்மை நன்கு அறிந்தவர். பட்சபாதம் இல்லாதவர்.

ரூத்திடம் காணப்பட்ட நற்குணம், தேவனை சார்ந்த வாழ்வு, கீழ்ப்படிதலுள்ள வாழ்வு, கரிசனையுள்ள வாழ்வு, உழைக்கும் திறன், பொறுமை ஆகியவை நம்மிலும் காணப்பட ஜெபிப்போம். குணசாலிகளாக வாழ்வோம்!

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

## மார்ச் மாத தலைப்பு


## திருமறையில் பெண்களின் சிறப்பு

## The specialty of women in Bible

Dear Children,

The theme this February is "**A TIME FOR RECONCILIATION**".

Reconciliation means that two people who were once enemies are now friends.




To be reconciled to God means **to be restored to a right relationship with him.**


Reconciliation was possible by Jesus Christ. He paid the price for our sins, and made us right with God.

## THE BIBLE IS A STORY OF CHRISTIAN RECONCILIATION

We started off in the Garden of Eden as friends of God, unashamed and living in fellowship with God and each other. But then sin entered the world, and all our relationships were broken.

The whole of Scripture is a record of God's reconciling us to Himself. We ran away, and He pursued us. We were scattered as sheep, and He sent the Good Shepherd. We hid in darkness, and He sent the True Light. We were dying in a self-made drought, and He sent the Living Water – Jesus Christ.

**WHERE ARE YOU NOW?** Will you receive Jesus Christ ?




Here is how you can receive Christ:

1.Admit that you are a sinner(**Confess**).

2.Be willing to turn from your sins (**Repent**).

3.**Believe** that Jesus Christ died for you on the Cross and rose from the grave.

4.Through prayer, **invite** Jesus Christ to come in as Lord and Savior, and control your life through the Holy Spirit.

**YOU ARE NOW RECONCILED WITH GOD**

# MAJOR BIBLE EVENTS #2
# CORRUPTION

"But you shall not eat of the tree of knowledge of good and evil. For in the day that you eat of it you shall surely die" (Genesis 2:17).

## FROM PERFECTION ...




Adam and Eve lived in a beautiful garden (planted especially for them by God). They could eat of any tree in Eden, except one. This first couple had a perfect relationship with their Creator. The animals, which Adam ruled over, got along perfectly.

## TO IMPERFECTION ...



The devil, though, had taken the form of a serpent. He caused Eve to question God's words. Both Adam and Eve ate the forbidden fruit. This caused them to immediately die spiritually (be separated from God) and to begin to die (age) physically, from that very day. Because of his disobedience (sin), all of his descendants (you and I) are born with sin in our nature.



## THE PROMISED ONE ...

The good news is that God promised that one day He would send a Savior - Jesus Chris. He came, died on the Cross for our sins, and rose again.

When you accept Him as Savior, you can be reconciled once again to God.

# CHILDREN IN THE BIBLE #2
# MIRIAM



Miriam is the sister who watches over her baby brother Moses among the bulrushes on the banks of the Nile.

Their mother had hidden Moses in a basket on the river bank to protect him from Pharaoh's decree to throw all Hebrew baby boys into the river.

As Miriam watches, Pharaoh's daughter discovers and pities Moses, and Miriam quickly intervenes to ask if the Egyptian princess would like a Hebrew woman to nurse the child for her.

The princess agrees, and Miriam quickly gets their mother. Pharaoh's daughter commands Moses' biological mother to nurse him and bring him back to her when he is older.



By the grace of God, Miriam helps save the infant Moses.

**Daily Application** - When Miriam watched her mother place her baby brother in the river, she was compelled to stay and see what would happen next.

Had she not stayed and intervened, Moses' story wouldn't have been the same.

As a child, Miriam played an important role in God's plan. Children don't need to wait to grow up before they can do important things for God!

## SAYING IT WITH PICTURES…





I tell you, now is the time of God's favor, now is the day of salvation. - 2 Corinthians 6:2 NIV




What shall we say, then? Shall we go on sinning so that grace may increase? By no means! We are those who have died to sin; how can we live in it any longer? - Romans 6:1–2 NIV


## TINY TOTS SECTION

### COLOR IN…



## JESUS CAME TO FIND THE LOST SHEEP OF ISRAEL



## THE CROSS CONNECTS US TO GOD

## MIRIAM SAVES THE DAY


SEE
THE
STORY

### Birth of Moses

1. Who was the person in charge during this time?




2. What did Jochebed put Moses in to hide him?



3. Where did Jochebed put Moses to hide him?



4. What did Miriam do while Moses was in the basket?



5. Did Moses stay in Egypt?




## THROUGH ADAM SIN CAME INTO THIS WORLD

### Spot 7 differences in the pictures below



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "Genesis Chapter 3, 4; Exodus Chapter 3"

1. Which animal was more subtle than all the other land animals?

a. Owl
b. Serpent
c. Monkey
d. Quail

2. Who did Adam blame for his sin?

a. Eve
b. Serpent
c. Himself
d. God

3. Who did Eve blame for her sin of eating the forbidden fruit?

a. Adam
b. Serpent
c. Himself
d. God

4. For how long would the serpent be under the curse God pronounced on him?

a. 100 years
b. All the days of its life
c. 7 days
d. 40 days and 40 nights

5. What promise was made regarding the seed of the woman?

a. It would multiply like the stars
b. It would bruise Serpent's head
c. Both of the above
d. None of the above.

6. Who was Moses' sister?

a. Ruth
b. Naomi
c. Miriam
d. Delilah

7. How long did Moses' mother hide him?

a. 1 month.
b. 3 months.
c. 6 months
d. 1 year.

8. When she couldn't hide him any longer, what did she do?

a. Make a basket; put him in the Nile.
b. Make a robe; to be invisible.
c. Make an ark ; to carry him away.
d. Make some food to eat.

9. What did Miriam ask Pharaoh's daughter? – "Shall I ……………………………….."

a. Hold the baby?
b. Take the baby back?
c. Bring a woman to nurse the baby?
d. Take care of this baby for you?

10. What happens when you confess your sins and ask God for forgiveness?

a. God forgives you.
b. You are reconciled with God.
c. Your relationship with God is right.
d. All of the above.

11. Who paid the price to reconcile us with God?

a. The Angels
b. Our Parents
c. The high Priest
d. Jesus Christ

12. When is it time for Reconciliation?

a. Later
b. Next week
c. Today
d. Now


## FIND THE MISSING SHEEP!

**Think about the millions of people outside the flock, not knowing about God's Plan of Salvation and the need for Reconciliation! What can you do for them?**






# TEEN THOUGHT - AMBASSADORS FOR CHRIST



Paul considered himself Christ's Ambassador.

Who is an Ambassador? Someone who represents a Sovereign (A Ruler).

He speaks not in his own name but on behalf of the ruler whom he represents,



Paul used this "Ambassador" image twice -- both in talking about his work.

Pray for me, he wrote from prison, "that I may speak boldly to proclaim the gospel, for which I am an ambassador in chains... " (Eph. 6:18-20).

He wrote also that God "gave us the ministry of Reconciliation...So we are ambassadors for Christ, (2 Corinthians 5:18-20).

**WE NEED TO BE CHRIST'S AMBASSADORS FOR A NEEDY WORLD TODAY!!**

**THESE CHILDREN ARE THINKING ABOUT WHERE THEY CAN GO AND SHARE GOD'S WORD WHEN THEY GROW UP. WHAT ABOUT YOU? FIND THE HIDDEN OBJECTS IN THE PICTURE!**






## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below…

1. The theme for the month of February is: ________________________________.
2. To be reconciled to God means ______________________________________

   ___________________________________________________
3. How you can receive Christ 1. ________________; 2. ____________________;

   3. ______________; 4. ________________ - You are now Reconciled with God.
4. 2 Corinthians 6:2 says – _____________________________________________

   _________________________________________________________________
5. ___________________________ is the Promised Savior, send by God.

Children, the Time for Reconciliation, just as the Time for Salvation, is always now. Tomorrow is often too late. The Holy Spirit is always ready to help you.

God bless,

Mrs. Briliya Jeyaseelan.

## Answers to January Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – Genesis Chapters 1;21;22

1. c. God
2. b. Water and Dry Land.
3. c. Third Day
4. a. Image of God.
5. d. To the Man.
6. d. 100
7. c. Offer him as Sacrifice.
8. d. Mount Moriah
9. d. 0 Days
10. a. "I will surely bless you"
11. d. The Lord will provide.
12. a. Beersheba

## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below...

6. The theme for the month of January is: **NEW JOURNEY NEW YEAR**.
7. The biggest and Most Significant Journey Story in The Bible is **Jesus leaving heaven and coming to earth**.
8. What does the Bible say about Creation? (Gen. 1:1)
   **"In the beginning, God created the heavens and the earth"**.
9. Abraham sacrificed the ram as an offering to God, and named the place – "**The LORD provides**."
10. Mary Jones saved for **6** long years, and travelled **42** kilometers to buy a bible.
11. In **1804, the British and Foreign Society** was formed, to make more bibles available in local languages.

***Note :* Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty *on or before 25th* of every month.**

# வேத வினாக்கள்

## [புதிய ஏற்பாடு முழுவதும்]

### (சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1.சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே எதை உண்டாக்கினார்?

2.சிலுவையினருகே நின்று கொண்டிருந்தவர்கள் யார் ?

3.சிலுவையினால் கொன்றார் - எதை?

4.சிலுவையின் மேல் சுமந்தார் - எவைகளை?

5. சிலுவையைச் சகித்தார் - எதற்காக?

6. சிலுவையில் அறையப்பட்டவர் யார்?

7. சிலுவையிலே அறையப்பட்டார் - எதிலே?

8.சிலுவையில் அறையப்பட்டது - எது ?

9. சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் இருந்தது என்ன?

10. சிலுவையைச் சுமக்கும்படி பலவந்தம்பண்ணப்பட்டவன் யார்?

11. சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் - யார்?

12. சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான் - யார்? யாரை?

13. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடினவர்கள் யார்?

14. சிலுவையின்மேல் போடுவித்தான் - யார்? எதனை?

15. சிலுவையில் அறைந்தபோது என்ன வேளையாயிருந்தது?



# ஜனவரி மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் |
|---|---|---|
| **1** | 2,00,000 | 2 *நாளா. 17:16* |
| **2** | 20 | *நியா. 11:32* |
| **3** | 6 | *உபா. 11:29* |
| **4** | 30,000 | 1 *இராஜா. 5:!13* |
| **5** | 4000 | 1 *நாளா. 23:5* |
| **6** | 3000 | 1 *இராஜா. 4:32* |
| **7** | 35,400 | *எண்.1:37* |
| **8** | 300 | *நியா. 15:4* |
| **9** | 139 | *எஸ்றா 2:42* |
| **10** | 15 | *கலா. 1:18* |
| **11** | *2024 – நடப்பு ஆண்டிற்கான புதிய வருடம் 2024-ஐ குறிக்கிறது* | 46:9 |
| $\mathbf{2,00,000 \div 20 \times 6 - 30,000 + 4,000 + 3,000 - 35,400 + 300 + 139 - 15 = 2024}$ | | |

குறிப்பு : ***அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.***

## ஜனவரி மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mrs. Abisha Grace Rejin
2. Mrs. Ajita Ebi
3. Mr.Emmanuel
4. Mrs. Esther Pauline Rani
5. Mrs. Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Grace shekar
8. Mrs.Kishi Maher
9. Mrs. Jenila Gannraj.L
10. Mrs.Jasmine Sobha
11. Mr. Jeba Jino
12. Mr.Salin Robert
13. Mrs.Sheeba merlin
14. Mrs.Sheeba Herlin
15. Mrs. Subija Jino
16. Mrs . Sharmila Rajesh
17. Mrs .Priya Ranjith Kumar
18. Mr. Prawin Durai Sam
19. Mrs.Manuel Sarah

## Children who answered January – 2024 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Camryn Robert.S
4. Clement Dave
5. Evelyn Loria
6. Galvin Robert.S
7. Gabrilyn Hannah
8. Giana Elin
9. Jevlyn Ana
10. Jerilyn Pushpam Nelson
11. Johan Sam Manuel
12. Joha Anit Manuel
13. Jeya Jehosheba Mahear
14. Jeya Joshua Maher
15. Jen Scudd
16. Jim Scott
17. Johanan Paul Jino
18. Joanna Paul Jino
19. Leonel I.J. Stalin
20. Linuel I.J. Sherwyn
21. Liana Erin
22. Steffi Priscilla .R
23. Starlyne Noble



# கோதுமை மணி

## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்



***இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி***
***14-06-1912 – 20-01-19***

**பெரேயா குடும்பம்**

பெரேயா குடிமக்களின் மிகப்பெரிய குணாதிசயம், எதற்கும் முணுமுணுப்பில்லாத கிண்கிணிச் சிரிப்புதான். ஈடித் தனது குறிப்பேட்டில், "இளம் வயதிலேயே எனக்குக் கணவன் வேண்டும். ஆனால் கணக்கில்லா குழந்தைகள் வேண்டுமென ஆசைப்படுவேன். அதன் அங்கீகாரமோ என்னவோ இப்போது எனக்கு நாற்பத்தெட்டு குழந்தைகள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேரக்குழந்தைகள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பெரேயாவின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அன்றும் இன்றும் புண்ணியரின் புகழையே பாடி வருகின்றனர். சிலர் குடும்பப் பெண்களாய் வேலையிலமர்ந்து குடும்பத்தோடு ஊழியம் செய்கின்றனர். சிலர் ஊழியர்களை மணந்து அவர்களுடன் இணைந்து நேரடியாய் ஊழியம் செய்கின்றனர். ஈடித்தின் பேரப்பிள்ளைகள் வழி வந்த கொள்ளுப் பேரப்பிள்ளைகளுக்கும் 'கார் ஆச்சி'யின் ஊழியத்தின் மேல் மதிப்பும் வாஞ்சையுமுண்டு. தாங்கள் கண்டிராத ஒரு பாட்டி அம்மாவை, ஆச்சியைப் பற்றிய உரையாடலும், சாட்சியும் அவர்கள் வீட்டில் அடிக்கடி கேட்கப்படும், பேசப்படும். ஈடித்தின் ஆழமான அன்பும், ஆண்டவருக்கான அவரது அர்ப்பணிப்புமே இதற்கு காரணம்.

**பத்மா, லீதியாள்**

கிறிஸ்துவை அறியாத, நேசிக்காத பிறமதக் குடும்பத்தில் பிறந்திருந்தும் இயேசுவை சொந்த இரட்சகராக விசுவாசித்து வந்த பத்மா, லீதியாள் என்ற இரு சகோதரிகள் VBS ஊழியத்தில் பங்கேற்று வந்தனர். பத்மாவை பாக்கித்தாயின் தம்பி பாண்டியன் ஏசுவடியான் தன் வாழ்க்கைத் துணையாக்கினார். பத்மாவின் தங்கை லீதியாளும் மணமாகும் பருவத்திலிருந்தார். கிறிஸ்தவ வாலிபர்களின் வரதட்சணை வசூல் அதிகமாயிருந்ததால் அதற்கு ஈடுகொடுக்க முடியாதாவரது பெற்றோர் அவரை பிறமத இளைஞனுக்கு மணமுடிக்கத் தயாராயினர். ஞானஸ்நானம் வரை தாய் தந்தையின் ஒப்புதலோடு அடியெடுத்து வைத்த லீதியாளென்ற அமைதிச் சின்னத்திற்குள்ளும் ஒரு எரிமலை புகைந்தது.

'கர்த்தரே தெய்வம்' என்று கெம்பீரமாய், சத்தமில்லா சாந்தத்துடன் பறைசாறும் நான் கட்டளை மீறி அவிசுவாசியோடு அந்நிய நுகத்தில் பிணைக்கப்படுவதா? முடியாது" என முடிவெடுத்த லீதியாள் கையோடு செயலிலும் இறங்கினாள். ஒருநாள் மதறாஸ் மாது லீதியாள், அன்றைய வேலை முடித்து வீடு திரும்பாமல் த உறவுக்காரர் சகோதரன் பி.சாமுவேலின் அலுவலகம் சென்று தன் சூழ்நிலையையும் முடிவையும் எடுத்துச் சொன்னாள். தான் இனி வீட்டிற்கு திரும்பிப் போவதில்லை, கர்த்தருக்காகவே வாழுவேன் என்று உறுதியடனிருந்த லீதியாளை திருநெல்வேலியிலுள்ள ஈடித் அம்மையாரிடம் போய்ச் சேரும்படி ரயில் ஏற்றிவிட்டார் சின்ன அண்ணாச்சி என்று பிரியமாய் அழைக்கப்பட்ட சாம் அண்ணாச்சி. மறுநாள் லீதியாள் பெரேயாவிற்கு வந்து சேர்ந்தார்.

லீதியாளைத் தெரிந்தவருக்கும் அன்றும் இன்றும் இது உண்மையா? என்று மெய் சிலிர்க்கவைக்கும் உண்மை இது. தாய்மையும் தைரியமும் நிறையப் பெற்றிருந்த ஈடித்திற்கு தெய்வ ஞானமும் அதிகமே. லீதியாளை அணைத்து அரவணைத்து அமரச்செய்துவிட்டு முதல் காரியமாய் லீதியாளின் பெற்றோருக்கு அவர்கள் சொத்தாம் லீதியாள் தன்னிடம் பத்திரமாய் இருப்பதை தெரிவித்துவிட்டு அதே வேகத்தில் ஏற்ற அதிகாரிகளிடம் கல்ந்தாலோசித்து லீதியாளை SIBI-க்கு வேதாகம படிப்பிற்காக அனுப்பிவைத்து விட்டார். அதைரியசாலியான லீதியாள் தைரியமாய் பெரேயா வந்து சேரக் காரணம் ஈடித்தின் அர்ப்பணிப்பு, அரவணைப்பு, ஞானம் இவைகளோடு தேவன் தந்த தெளிந்த புத்தியும்தான். காலம் நிறைவேறுகையில் கர்த்தரின் நடத்துதலுக்கு இணங்கி கிறிஸ்து தந்த தன் மகள் லீதியாளுக்கும், யூனியன் பைபிள் செமினரியில் பயின்று வந்த ஜேசன் தர்மராஜ் என்ற விசுவாசிக்கும் திருமணம் நடைபெற வழி வகுத்தார். இந்த ஜேசன் லீதியாள் தம்பதிகள் திருநெல்வேலி அத்தியட்சாதீன பேராயர் வரிசையில் இடம் பெற்றவர்.

- தொடரும்

## பாடல் பிறந்த கதை

### இவ்வுயர் மலை மீதினில் [பாமாலை 156]
### (O Master, it is Good to be)



*இவ்வுயர் மலைமீதினில்*
*எம் நாதா, உந்தன் பாதத்தில்*
*எம் பாவக் கண்ணால் காண்கிறோம்*
*உம் தாசர் பூர்வ பக்தராம்;*
*சீனாய் மலைமேல் கற்பனை*
*வானோரால் பெற்ற மோசேயை;*
*தீ, காற்று, கம்பம் கண்டோனை*
*மா மென்மை சத்தம் கேட்டோனை.*

*இவ்வுயர் மலைமீதினில்*
*எம் நாதர் தூய பாதத்தில்,*
*மா இருள் மேகம் மூடினும்,*
*மா ஜோதி பார்வை வாட்டினும்,*
*காண்போமே தெய்வ மைந்தனை,*
*கேட்போமே தெய்வ வார்த்தையை.*
*'இவர் என் நேச மைந்தனார்!*
*இவர்க்குச் செவிகொடுப்பீர்.'*

*இப்பாடலை எழுதியுள்ள ஆர்த்தர் ஸ்டான்லி (Arthur Penrhyn Stanley) இங்கிலாந்தின் வடமேற்கு மாகாணமான ஷெஷயர் (Cheshire) பகுதியில் 13 டிசம்பர் 1815ம் ஆண்டு பிறந்தார். ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகக் கல்லூரியில் பத்து வருடங்கள் பேராசிரியராகப் பணிபுரிந்த ஸ்டான்லி, அந்நேரத்தில் இங்கிலாந்து திருச்சபை வரலாறு குறித்த ஆய்வுகளில் ஈடுபட்டு, ஏராளமான ஆய்வுக்கட்டுரைகளை எழுதி தொகுத்து வெளியிட்டார். 1856 முதல் 1863 வரை ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் 'Regius Professor of Ecclesiastical History' ஆக பணிபுரிந்த ஸ்டான்லி, 'யூத திருச்சபையின் வரலாற்றை' இரண்டு தொகுப்புகளாக வெளியிட்டார். 1863ம் ஆண்டு வெஸ்ட்மின்ஸ்டர் பேராலயத்தின் Dean ஆக ஸ்டான்லி நியமிக்கப்பட்டார்.*

*இங்கிலாந்தின் திருச்சபை வரலாற்றைக் குறித்த ஏராளமான கட்டுரைகளையும், ஆய்வுக் குறிப்புகளையும் எழுதிய ஸ்டான்லி, தன் வாழ்நாளில் சில முக்கிய பாடல்களையும் எழுதி வெளியிட்டார். இவற்றுள் "இவ்வுயர்மலை மீதினில்' பாடலும்*

ஒன்று. நம் 'கிறிஸ்து சபை பாமாலை'யில், மருரூபத் திருநாளுக்கான ஒரே பாடலாக இப்பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்டான்லி இப்பாடலை *1870*ம் ஆண்டு *Macmillan's Magazine*'ல் வெளியிட்டார். இப்பாடலைப் பற்றிய குறிப்பு *Nutter, Charles S. & Wilbur F. Tillett.* வெளியிட்ட *"The Hymns and Hymn Writers of the Church"* புத்தகத்தில் காணக் கிடைக்கிறது.

லூக்கா *9*ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'கிறிஸ்து மறுரூபமான நிகழ்வு' என்பது இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் மட்டுமல்லாது, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்ற பிதாவின் சத்தம் தொனிக்கும் நிகழ்வாதலால், இது ஒவ்வொரு கிறிஸ்தவரின் நம்பிக்கையின் அச்சாரமாகவும் திகழ்கிறது.

இயேசுவும் அவருடைய சீஷர்களான பேதுருவும், யோவானும், யாக்கோபும், ஜெபம் செய்வதற்கென்று மறுரூப மலைக்குச் செல்கிறார்கள். லூக்கா *9:29*ல் "அவர் ஜெபம்பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது" என்று நாம் வாசிக்கிறோம். அப்போது தீர்க்கதரிசிகளான மோசேயும் எலியாவும் மகிமையோடே காணப்பட்டு இயேசுவுடனே எருசலேமிலே அவர் நிறைவேற்றப்போகிற அவர் மரணத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்திலே சீஷர்கள் நித்திரை மயக்கமாயிருந்து, பின்னர் விழித்து இயேசுவையும், உடன் நின்ற மோசையையும் எலியாவையும் கண்டு, அவர்கள் பிரிந்து சென்றபின்னர் 'ஐயரே **நாம் இங்கே இருக்கிறது நல்லது**. நாம் உமக்கும் மோசேவுக்கும் எலியாவுக்கும் ஒவ்வொரு கூடாரங்களைப் போடுவோம்" என்று பேதுரு கூறும் நிகழ்வையும் வாசிக்கிறோம். *"Master,* ***it is good for us to be here****" Luke 9:33*

"**இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்**" என்ற பிதாவின் கட்டளை தொனிக்கும் 'இயேசு மறுரூபமாகுதலின் நிகழ்வு', கிறிஸ்துவின் ஞானஸ்நானத்துக்கு நிகரான இன்னொரு நிகழ்வாகும். இருப்பினும் மறுரூபமாக்குதலைக் குறித்த பாடல்கள் பாடலாசிரியர்களால் எழுதப்படவில்லை. இதன் காரணமாய், ஸ்டான்லி, இயேசு மறுரூபமாகிய நிகழ்வின் முக்கியத்துவத்தை எழுத எண்ணி அதை மிகவும் நேர்த்தியாய் இப்பாடலில் விவரித்து எழுதியுள்ளார்.

.

<u>**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**</u>




## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் பிப்ரவரி – 2024




| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 10.15 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 4 | ஞாயிறு | Church Picnic | |
| 6 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 9 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 10.15 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 11 | ஞாயிறு | 11.00pm – 1.00 pm | உபவாச ஜெபம் - ஆயர் இல்லம் |
| | | 2.00pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| | | 5.30pm – 6.30pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா |
| 13 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 14 | புதன் | 8.00 pm – 9.00 pm | சாம்பல் புதன்கிழமை ஆராதனை |
| 16 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 10.15 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 18 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 20 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி |
| 23 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 10.15 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 26 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | வாலிபர் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 27 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 29 | வியாழன் | 11.45 pm | மாத இறுதி ஜெபம் |

# BIBLE READING FOR CHILDREN – FEBRUARY 2024




| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.2.24 | Acts | 23 : 1- 5 |
| 2.2.24 | Acts | 23 : 6- 10 |
| 3.2.24 | Acts | 23 : 11 - 15 |
| 4.2.24 | Acts | 23 : 16 - 21 |
| 5.2.24 | Acts | 23 : 22 - 29 |
| 6.2.24 | Acts | 23 : 30 - 35 |
| 7.2.24 | Acts | 24 : 1 - 5 |
| 8.2.24 | Acts | 24 : 6 - 10 |
| 9.2.24 | Acts | 24 : 11 - 15 |
| 10.2.24 | Acts | 24 : 16 - 21 |
| 11.2.24 | Acts | 24 : 22 - 27 |
| 12.2.24 | Acts | 25 : 1 - 5 |
| 13.2.24 | Acts | 25 : 6 - 11 |
| 14.2.24 | Acts | 25 : 12 - 16 |
| 15.2.24 | Acts | 25 : 17 - 21 |
| 16.2.24 | Acts | 25 : 22 - 27 |
| 17.2.24 | Acts | 26 : 1 - 6 |
| 18.2.24 | Acts | 26 : 7 - 13 |
| 19.2.24 | Acts | 26 : 14 - 21 |
| 20.2.24 | Acts | 26 : 22 - 28 |
| 21.2.24 | Acts | 26 : 29 - 32 |
| 22.2.24 | Acts | 27 : 1 - 5 |
| 23.2.24 | Acts | 27: 6 - 10 |
| 24.2.24 | Acts | 27 : 11 - 15 |
| 25.2.24 | Acts | 27 : 16 - 20 |
| 26.2.24 | Acts | 27 : 21 - 26 |
| 27.2.24 | Acts | 27 : 27 - 31 |
| 28.2.24 | Acts | 27 : 32 – 38 |
| 29.2.24 | Acts | 27 : 39 - 44 |

# தினசரி வேத வாசிப்பு பகுதிகள் - பிப்ரவரி 2024




| தேதி | நாள் | காலை | | மாலை | |
|---|---|---|---|---|---|
| 1 | வியாழன் | நியாயாதிபதி | 8 : 19 - 35 | எபேசியர் | **5 : 1 - 15** |
| 2 | வெள்ளி | நியாயாதிபதி | 9 : 1 - 15 | எபேசியர் | **5 : 17 - 33** |
| 3 | சனி | நியாயாதிபதி | 9 : 16 - 29 | எபேசியர் | **6 : 1 - 24** |
| 4 | ஞாயிறு | நியாயாதிபதி | 9 : 30 - 46 | பிலிப்பியர் | **1 : 1 - 17** |
| 5 | திங்கள் | நியாயாதிபதி | 9 : 47 - 57 | பிலிப்பியர் | **1 : 18 - 30** |
| 6 | செவ்வாய் | நியாயாதிபதி | 10 : 1 - 18 | பிலிப்பியர் | **2 : 1 - 16** |
| 7 | புதன் | நியாயாதிபதி | 11 : 1 - 3 | பிலிப்பியர் | **2 : 17 - 30** |
| 8 | வியாழன் | நியாயாதிபதி | 11 : 14 - 25 | பிலிப்பியர் | **3 : 1 - 21** |
| 9 | வெள்ளி | நியாயாதிபதி | 11 : 26 - 40 | பிலிப்பியர் | **4 : 1 - 10** |
| 10 | சனி | நியாயாதிபதி | 12 : 1 - 15 | கொலோ | **4 : 11 - 23** |
| 11 | ஞாயிறு | நியாயாதிபதி | 13 : 1 - 11 | கொலோ | **1 : 1 - 15** |
| 12 | திங்கள் | நியாயாதிபதி | 13 : 12 - 25 | கொலோ | **1 : 16 - 29** |
| 13 | செவ்வாய் | நியாயாதிபதி | 14 : 1 - 13 | கொலோ | **2 : 1 - 11** |
| 14 | புதன் | நியாயாதிபதி | 14 : 14 - 20 | கொலோ | **2 : 12 - 23** |
| 15 | வியாழன் | நியாயாதிபதி | 15 : 1 - 12 | கொலோ | **3 : 1 - 15** |
| 16 | வெள்ளி | நியாயாதிபதி | 15 : 13 - 20 | கொலோ | **3 : 16 - 25** |
| 17 | சனி | நியாயாதிபதி | 16 : 1 - 13 | 1 தெசலோ | **4 : 1 - 18** |
| 18 | ஞாயிறு | நியாயாதிபதி | 16 : 14 - 20 | 1 தெசலோ | **1 : 1 - 10** |
| 19 | திங்கள் | நியாயாதிபதி | 16 : 21 - 31 | 1 தெசலோ | **2 : 1 - 10** |
| 20 | செவ்வாய் | நியாயாதிபதி | 17 : 1 - 13 | 1 தெசலோ | **2 : 11 - 20** |
| 21 | புதன் | நியாயாதிபதி | 18 : 1 - 14 | 1 தெசலோ | **3 : 1 - 13** |
| 22 | வியாழன் | நியாயாதிபதி | 18 : 15 - 31 | 1 தெசலோ | **4 : 1 - 18** |
| 23 | வெள்ளி | நியாயாதிபதி | 19 : 1 - 18 | 1 தெசலோ | **5 : 1 - 11** |
| 24 | சனி | நியாயாதிபதி | 19 : 19 - 30 | 1 தெசலோ | **5 : 12 - 28** |
| 25 | ஞாயிறு | நியாயாதிபதி | 20 : 1 - 18 | 2தெசலோ | **1 : 1 - 12** |
| 26 | திங்கள் | நியாயாதிபதி | 20 : 19 - 32 | 2தெசலோ | **2 : 1 - 17** |
| 27 | செவ்வாய் | நியாயாதிபதி | 20 : 33 - 48 | 2தெசலோ | **3 : 1 - 18** |
| 28 | புதன் | நியாயாதிபதி | 21 : 1 - 13 | 1 தீமோ | **1 : 1 - 20** |
| 29 | **வியாழன்** | **நியாயாதிபதி** | **21 : 14 - 25** | **1 தீமோ** | **2 : 1 - 15** |

## ஆராதனை பாடல்கள் - பிப்ரவரி 2024

| | |
|---|---|
| **02-02-24** | |
| பாமாலை - 15 | அலங்கார வாசலாலே |
| பாமாலை - 326 | இரட்சா பெருமானே |
| கீர்த்தனை – 352 | மனம் இசைந்து யாவரும் |
| *முடிவு கவிகள்* – 2 | கர்த்தரே தற்காரும் |
| **09-02-24** | |
| பாமாலை - 267 | போற்றும் போற்றும் |
| பாமாலை - 298 | ஆராய்ந்து பாரும் கர்ததரே |
| கீர்த்தனை – 106 | ஒரு மருந்தரும் குருமருந்து |
| பாமாலை - 25 | கர்த்தாவே இப்ப்போதும்மை |
| **14-02-24 – *சாம்பற் புதன் கிழமை*** | |
| பாமாலை - 90 | நாற்பது நாள் ராப்பகல் |
| பாமாலை - 103 | என் அருள் நாதா இயேசுவே |
| கீர்த்தனை – 163 | விந்தை கிறிஸ்தேசு ராசா |
| பாமாலை - 114 | வாதையுற்ற மீட்பரே |
| **16-02-24** | |
| பாமாலை - 19 | எவ்வண்ணமாக கர்த்தரே |
| பாமாலை - 258 | இயேசுவே உம்மை தியானித்தால் |
| கீர்த்தனை – 75 | இவரே பெருமான் |
| பாமாலை - 311 | சிலுவை சுமந்தோனாக |
| **23-02-24** | |
| பாமாலை - 14 | அநாதியான கர்த்தரே |
| பாமாலை - 328 | அஞ்சாதிரு என் நெஞ்சமே |
| கீர்த்தனை – 194 | விசுவாசத்தால் |
| பாமாலை– 322 – 1& 7 | கர்த்தாவை நல்ல பக்தியாலே |

## திருமறை பாட ஒழுங்குகள் - பிப்ரவரி 2024

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| **02-02-24** | உறவுகளை சீர்படுத்தும் காலம் | ஆதி. 45 :1 – 16 | அப். 15:32–41 | மத்தேயு 20:17 –28 | - |
| **09-02-24** | குணமாக்கும் திருப்பணி | ஏசாயா 35 :1 – 10 | யாக்கோபு 5:13-20 | மத்தேயு 8:14-20 | 103 |
| **14-02-24** | சாம்பல் புதன்கிழமை | யோவேல் 2 :12 – 21 | கலா. 2 :15 -21 | லூக்கா 18: 10 – 14 | 32 |
| **16-02-24** | மனதுருகும் கிறிஸ்து | ஏசாயா 55 :1 – 13 | எபிரேயர் 13 : 8 -21 | லூக்கா 10:25-37 | - |
| **23-02-24** | வாழ்வு தரும் விசுவாசம் | 2 இராஜா. 4 :1 - 7 | ரோமர் 10: 1 - 13 | மத்தேயு 15: 21 – 28 | 72 |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக்குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| **06-02-24** | சங்கீதம் | 119:81-96 | Hamdan |
| **13-02-24** | சங்கீதம் | 119:97-112 | Murroor |
| **20-02-24** | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| **27-02-24** | சங்கீதம் | 119:113-128 | Musaafa |

# BIRTHDAY - FEBRUARY




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mrs. | Jansi Salini |
| 2 | Mrs. | Jasmin Jebachristy Ananthan |
| 2 | Mrs. | Rebbekal Gracy D |
| 2 | Baby. | Joel Wilfred |
| 3 | Master. | Christhilo |
| 3 | Mr. | John Andrews |
| 5 | Mr. | Dannie Victor |
| 5 | Mr. | Vino Thampiraj |
| 6 | Master. | Linuel Sherwyn |
| 6 | Mr. | Felix Dayamoni. I |
| 6 | Master | Sangamithran D L |
| 7 | Mr. | Johnson. P.S. M. |
| 8 | Mr. | John Adithya A |
| 8 | Master. | Edmer Fergus. R |
| 8 | Mrs. | Tamilarasi |
| 10 | Ms. | Alexia Carlyn |
| 11 | Mrs. | Selvi Thavasu |
| 12 | Mr. | Barnabas Kevin |
| 12 | Master. | Aaron Peter Samuel |
| 14 | Master. | Leonel Stalin |
| 14 | Ms. | Doreen Amadea |
| 15 | Mr. | Asir Kanagaraj |
| 15 | Ms. | Kavi Yalini Arun |
| 16 | Mrs. | Arul Mary Larata Helan. J |
| 16 | Mrs | R. Shiny Brindha |
| 17 | Mr. | Sam Winston |
| 17 | Master. | Mishael Wesley |
| 18 | Mr. | Rohan Nayagam |
| 19 | Mr. | Daniel Nishanth Alexander |
| 19 | Mrs. | Stella Darling Rajam |
| 20 | Miss. | Debi Lovisha S |
| 23 | Mr. | Renald Daniel R |
| 23 | Ms. | Eunice Graclyn |
| 24 | Mr. | Jino. J.D |
| 24 | Mrs. | R. Rajalin Jaba Rani |
| 25 | Master. | Aaron Paul |
| 25 | Mr. | Jose Wesly. J |
| 25 | Master. | S. Benjamin Bright |
| 26 | Master. | Abner Thephleus |
| 28 | Mrs. | Israel Sinha Devi |
| 28 | Master. | Rajat Kevin. R |
| 28 | Mrs. | Gnana Mala Melwin |

## WEDDING ANNIVERSARY – FEBRUARY




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. & Mrs. | Prince Victor Vm |
| 2 | Mr. & Mrs. | Praveen Singh |
| 6 | Mr. & Mrs. | Pravin Kumar Noah S |
| 6 | Mr. & Mrs. | Jaya Chandraraja |
| 7 | Mr. & Mrs. | Aron T K |
| 7 | Mr. & Mrs. | Jacob Jerald Ponselvan |
| 14 | Mr. & Mrs. | Joseph Immanuel Jamal James |
| 15 | Mr. & Mrs. | Ashok Raj Kumar |
| 16 | Mr. & Mrs. | Samuel Kirubasingh Appadurai |
| 16 | Mr. & Mrs. | Rev. ADONI MANUEL |
| 18 | Mr. & Mrs. | Prabhu Selvanayagam |
| 22 | Mr. & Mrs. | Titus Agastin |
| 24 | Mr. & Mrs. | George Kirubaharan |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை




| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| 1 | Arun Jebastin Gnanaiah | 472 |
| 2 | Vigil Kumar Ratnamony | 473 |


CSI Tamil Parish
Abu Dhabi
Junior Church Retreat 2024
Saturday
13th January


Led by
Junior Church Team
CSI Tamil Parish, Dubai







Junior church picnic- January 27 - Yas North Park

Primary group



Junior group



Senior group


Pray
Fast
Repent
Ash
Wednesday


The
SEASON
OF
LENT
40
DAYS